பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 27 திங்கட்கிழமை 08.02.2021 கதிர் 326

## கொரோனாவிலிருந்து 64,141 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 740 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 64 ஆயிரத்து 141 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் 4 ஆயிரத்து 851 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.



### ஐ.நா. கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில்

## எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுவது போல் அரசுக்கு எதிராக வடக்கு, கிழக்கில் போராட்டம்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கவலை

கொழும்பு, ஜன.08

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில், எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுவது போல் இலங்கை அரசுக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி சில தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டது.

- இவ்வாறு கவலையுடன் தெரிவித்தார் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா.

2

### நீதிக்கான பேரணி வெற்றியின் எதிரொலி

## சுமந்திரன் எம்.பிக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வாபஸ்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படை திடீரென மீளப்பெறப்பட்டுள்ளது.

நேற்றிரவு உயர் அதிகாரிகளிடமிருந்து கிடைத்த உத்தரவுக்கமைய அவரின் அதிரடிப் படை பாதுகாப்பு மீளப்பெறப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு நீக்கப்பட்டமைக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

2

## இலங்கையில் 103 வயது பெண் கொரோனாத் தொற்றால் சாவு!

இலங்கையில் 103 வயது பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு

2

## ஐ.நாவில் இலங்கை மீதான நடவடிக்கைக்கு கனடா மீண்டும் தலைமையேற்க வேண்டும்!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து



இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ.நாவில் கனடா தலைமைத்துவம் வழங்குவது மீண்டும் தேவையாக உள்ளது என மனித

2

### பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி

## சர்வதேச மட்டத்தில் ராஜபக்ஷ அரசை நெருக்கடிக்குள் தள்ளும் சதி முயற்சி

### பதறுகின்றார் அமைச்சர் கம்மன்பில



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் இடம்பெற்ற பேரணி ராஜபக்ஷ அரசை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள் தள்ளும் சதி முயற்சி என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்களின் நீதிக்கான பேரணி தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர்

2



## உங்கள் அதிகாரப் பசி ஆட்சி மக்களின் சக்தியால் அழியும்

### கோட்டாபயவுக்கு பொன்சேகா எச்சரிக்கை



எதிரிக்கு முன்னால் திறந்த வெளியைக் கடப்பது ஆபத்தானது என்பதை நான் மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நினைவுபடுத்துகின்றேன்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தனது சமூக வலைத்தள பதிவில் ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுத்து குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1991 இல் யாழ்ப்பாணக் கோட்டையைக் காப்பாற்றுவதற்கான போரில், நீங்கள் எதிரிக்கு முன்னால் நிறுத்தப்பட்டு திறந்த வெளியைக் கடந்து ஆபத்தில் சிக்கியபோது, உங்களையும் உங்கள் படையணியையும் நான் உட்பட முதலாவது சிங்கப் படைப்பிரிவினர் காப்பாற்றினோம்.

இன்று, 30 ஆண்டுகளுக்குப் பின்னர், 2021 இல், அரசியல் அரங்கில், நீங்கள் மீண்டும் அதே தவறைச் செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் முகாமின் கட்டளையும் கட்டுப்பாடும் உடைந்துவிட்டது என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. உங்களுக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களைக் கேலி செய்வதன் மூலம், நீங்கள் அரசியல் ரீதியாகத்

2

## கோண்டாவிலில் கொள்ளையர்கள் சிக்கினார்கள்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கோண்டாவிலில் வீடு புகுந்து கொள்ளையடித்தவர்கள் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் 24 மணித்தியாலங்களுக்குள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2

## இலங்கையில் 103 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார்.

காலி மாவட்டம், கிரிமங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணே கடந்த 06ஆம் திகதி அவரது வீட்டிலேயே உயிரிழந்துள்ளார். அதன்பின்னர் அவரது சடலம் கராபிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, அவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை தெரிய வந்துள்ளது எனக் காலி மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரியந்த டி சில்வா தெரிவித்தார். நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த அதிக வயதுடையவர் குறித்த பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரன் எம்.பிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான தமிழ்பேசும் சமூகத்தின் நீதிக்கான பேரணி பல்வேறு தடைகளைத் தாண்டி நேற்று மாலை பொலிகண்டியில் வெற்றியுடன் நிறைவடைந்தது. இந்தப் பேரணியின் ஆரம்பத்தில் இருந்து நிறைவு வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், த.கலையரசன் ஆகியோர் முன்னின்று செயற்பட்டனர். இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை நேற்றிரவு திடீரென மீளப்பெறப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையினருடன் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றமை உள்ளிட்ட சில நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அவரின் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், பிரமுகர் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் சுமந்திரனுக்குப் பாதுகாப்புக் கடமையில் இருப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரியும் தீயில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்பேசும் மக்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் சர்வதேசத்திடம் நீதி கோரியும் கடந்த 3ஆம் திகதி முதல் நேற்று 7ஆம் திகதி வரை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதில் பல பத்தாயிரம் தமிழ்பேசும் மக்கள் பங்கேற்று தங்கள் உணர்வலைகளை வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டப் பேரணி குறித்து தொலைக்காட்சி ஒன்றுக்கு இராணுவத் தளபதி இன்று வழங்கிய செவ்வியின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டே, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த சில நாள்களாக நடைபெற்ற பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் நடைபெற்ற இவ்வாறான போராட்டங்கள் ஒரு சில தரப்பினரின் குறுகிய நோக்கத்துக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், எரியும் தீயில் எண்ணையை ஊற்றுவது போல் இலங்கை அரசுக்கு எதிராக இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால் இது போன்ற போராட்டங்கள் - பேரணிகள் - ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

இருப்பினும் கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலையைக் கருத்தில்கொண்டு சுகாதார நடைமுறைகளை மீறியவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

## சர்வதேச மட்டத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் ஆட்சியை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டதாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட மனித உரிமை சபையின் உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அரசின் ஒருசில துறைகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளமையே இவர்களின் பிரச்சினையாக உள்ளது.

எனினும், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை சிவில் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது மற்றும் தகுதியான இராணுவத்தினரை உரிய துறைகளில் ஈடுபடுத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பன எந்த விதத்திலும் தவறான நகர்வுகள் அல்ல.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இதனை எழுத்து மூலம் அனுப்பியுள்ளோம்.

இதேவேளை, ஆணையாளரின் அறிக்கையை அரசு ஆதரிப்பதாகக் கூறும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பு இல்லை. - என்றார்.

## உங்கள் அதிகாரப் பசி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனிமைப்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. உங்கள் அதிகாரப் பசி ஆட்சி உங்களை ஆட்சிப்பீடம் ஏற்றிய மக்கள் சக்தியால் அழிக்கப்படும்.

எனவே, கோட்டாபயவுக்கு எனது அறிவுரை என்னவென்றால், நாடு உட்பட பெரும் நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், நான் உட்பட பொது எதிர்க்கட்சியின் அரசியல் தலைவர்கள் மற்றும் நண்பர்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக் கூடாது. மேலும், இது பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளை அதிகரிக்கும் - என்றுள்ளது.

## ஐ.நாவில் இலங்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரிமைகள் கண்காணிப்பகம் அமைப்பின் கனடாவுக்கான இயக்குநர் பரீடா டெய்வ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போருக்குப் பின்னர் நல்லிணக்கத்தையும் நீதியையும் ஏற்படுத்துவதற்கான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முக்கிய பங்களிப்பு செய்த நாடுகளில் ஒன்றாகக் கனடா காணப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மீண்டும் மோசமடைகின்றது எனவும், இராஜதந்திர நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயற்பாடுகளைத் தீவிரப்படுத்துவது குறித்து கனடா கவனம் செலுத்துவது முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை அதன் தற்போதைய பாதையில் செல்ல அனுமதிப்பதா அல்லது பாதிக்கப்படக்கூடிய இலங்கையர்களைப் பாதுகாத்து, சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதா என்ற முக்கிய கேள்வியுடன் இம்முறை மனித உரிமைகள் சபையின் அமர்வு ஆரம்பமாகின்றது எனவும் பரீடா டெய்வ் கூறியுள்ளார்.

இந்த முயற்சிகளுக்குத் தலைமை தாங்கக்கூடிய இடத்தில் கனடா இருக்கின்றது எனவும், சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை தீவிரப்படுத்துவது பயங்கரங்களைத் தடுத்து நிறுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கோண்டாவிலில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று அதிகாலை கோண்டாவில் செபஸ்ரியன் வீதியில் உள்ள வீடொன்றில் புகுந்து வீட்டில் உள்ளவரை காயப்படுத்தி 6 பவுண் தாலிக்கொடியை அபகரித்துச் சென்ற குற்றச்சாட்டிலேயே இந்த மூவரும் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் பகுதி வீட்டில் அதிகாலை வேளையில் புகுந்த கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்தவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் காயப்படுத்தி விட்டு தாலிக் கொடியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றிருந்தது.

இதுதொடர்பில் வீட்டு உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டை யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிப்புரைக்கமைய மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான பொலிஸ் அணியினர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் இந்த வீட்டிலிருந்து அபகரிக்கப்பட்ட தாலிக்கொடி கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரின் வீட்டு மலசலகூட குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதோடு மற்றைய சந்தேக நபரின் வீட்டிலிருந்து இரண்டு வாள்கள் மற்றும் 250 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் முதல்கட்ட விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.


**காணி, கடை விற்பனைக்கு**

1. தெல்லிப்பளையில் மாடிக்கடை விற்பனைக்குண்டு.
2. உடுப்பிட்டியில் மாடிக்கடை விற்பனைக்குண்டு.
3. கடைகள், வீடுகள் வாடகைக்குண்டு.
4. முல்லைத்தீவு மாவட்டத்தில் குமிளமுலையில் 2 ஏக்கர் காணி வியாபாரப் பதிவுடன் விற்பனைக்குண்டு. வியாபாரப் பதிவு மாற்றித்தரப்படும்.

**அலுவலகம்:-**
குஞ்சர்கடை அருகாமை,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

**தொடர்புகளுக்கு:**
0773434415
0778578528

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொறுப்புக் கூறலை இதிலாவது நிலைநாட்டுவதற்கு முயலுங்கள்!

'தன் வினை தன்னைச் சுடும்; ஒட்டப்பம் வீட்டைச் சுடும்' என்றார் பட்டினத்து அடிகள்.

அந்த நிலைமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட்ட தரப்புக்கு ஏற்பட்டிருக்கின்றது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரலில் ஈஸ்டர் ஞாயிறன்று நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்து விட்டது.

அதன் பரிந்துரைகள் யாவை என்பது இன்னும் உத்தியோக பூர்வமாக வெளியாகாவிட்டாலும் அதில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் சில அம்சங்கள் வெளியே கசிந்துள்ளன.

பரிந்துரைகளைப் பெற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதன் விவரங்களைப் பெரும்பாலும் நாளை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தப் பரிந்துரைகள் தொடர்பில் தமது அடுத்த நடவடிக்கைத் திட்டத்தை ஜனாதிபதி நாளைய அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியிடுவாரோ தெரியவில்லை. எனினும், பிரதான பரிந்துரைகளை அமைச்சரவையின் கவனத்துக்குத் தெரிவித்து, அமைச்சர்களின் பிரதிபலிப்புகளையும், ஆலோசனைகளையும் அவர் கோருவார் எனத் தெரிகின்றது.

அந்த அறிக்கையின் பிரதான பரிந்துரைகள் அங்கு அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டதுமே உள்வீட்டுப் பிரளயம் அல்லது கூட்டுக்குள் குழப்பம் வெடிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஏனெனில், ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அத்தகையன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முன்னைய நல்லாட்சி அரசின் பிரதானிகள் சிலருக்கும், அதிகாரிகள் சிலருக்கும் எதிராகக் குற்றவியல் குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, தேசியப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியாகவிருந்த சிசிர மெண்டிஸ் ஆகியோருக்கு எதிராகவும் குற்றவியல் குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தவர் 2019 நவம்பர் வரை அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான்.

அவர் நியமித்த ஆணைக்குழு அவரையே குற்றவியல் குற்றங்களுக்காக சட்டத்தின் முன் நிறுத்தி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு விதந்துரைத்திருப்பது முக்கியமான விவகாரமாகும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே. எனினும் அவர்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர். அவரது கட்சி ஆளும் பொதுஜன பெரமுனவின் மொட்டுக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றது. அவரது கட்சியினர் பதினைந்து பேர் கூட்டணி அரசில் எம்.பிக்களாக இடம்பெற்றுள்ளனர்.

சுதந்திரக் கட்சித் தலைவருக்கு எதிராகவும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் விவரத்தை நாளைய கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பிக்கும் போது, சு.கவைச் சேர்ந்த கூட்டணி அரசின் அமைச்சர்கள் என்ன பிரதிபலிப்பைக் காட்டுவார்கள்? அந்த அறிக்கையை அம்பலப்படுத்தவும் அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் அனுமதிப்பார்களா என்பதுதான் கேள்வி.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்காக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவையும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவையும் விசாரணை என்ற பெயரில் விளக்கமறியல் சிறையில் தள்ளிவிட்டு, தம்மைப் பெரும் உத்தமர் போல காட்டிக் கொண்டவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்குக் கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போன்றோரை அழைக்காமல், புறக்கணித்து – உதாசீனப்படுத்தி – ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு நடத்தியவர் அவர்.

அவரின் விதூகர் கூட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரே புலனாய்வுத் தகவல்களைக் கையாண்டனர். முறையான பிற அதிகாரிகளுக்கு அவை செல்லவோ, அவர்கள் அவற்றைக் கையாளவோ, அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கவோ அனுமதிக்கப்படவில்லை.

ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி உரிய குற்றவியல் நடவடிக்கைகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படுமானால் உண்மை அம்பலமாகும். உரியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்படும்.

அப்படி நடக்குமானால் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு கொஞ்சமாவது நீதி கிட்டும்.

## நாட்டின் உரிமைகளை மக்களுக்கு அரசு வழங்கும் என்பதை அவர்கள் மனதில் கொள்ளல் வேண்டும்!

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



பௌத்த துறவிகளுக்கு சிறைக் கூடங்களை ஒதுக்கிய அரசாங்கத்தை மாற்றி பௌத்த துறவிகளின் பெற்றோருக்கு நிழல் தரும் வீடமைப்பு திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்துள்ளோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, தாங்கள் நாட்டின் உரிமைகளை மக்களுக்கு வழங்கும் அரசாங்கம் என்பதை தேரர்கள் போன்றே நாட்டை நேசிக்கும் மக்களும் மனதில்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சியாம்பலாண்டுவ புத்தம புரான ரஜமஹா விகாரையில் நடைபெற்ற மிஹிந்து நிவஹன திட்டத்தின் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

இலங்கையின் பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் சகவாழ்வை 30 ஆண்டுகளாக அழித்த எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவித்தோம். அமைதி நிலைநாட்டப்பட்டது. அபிவிருத்தி ஆரம்பமாகியது.

அதன்பின்னர், நல்லாட்சியின் காலத்தில் நீங்கள் நினைவில் வைத்திருக்கும் அமைதியைக் கொண்டுவருவதில் கருவியாக இருந்த போர்வீரர்கள் மீதான ஜெனிவா தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. நிலைமை எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த நாட்டில் எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திட அனைத்து திட்டங்களும் தயாராக இருந்தன. இது மக்களுக்கு நில உரிமை மற்றும் இந்த நாட்டில் வாழும் உரிமையை பறிக்கும் என்று நான் நம்புகிறேன்.

எனவே, எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் எம்.சி.சி. ஒப்பந்தத்திலிருந்து நாங்கள் விலகினோம். நாங்கள் எங்கள் நாட்டின் உரிமைகளை மக்களுக்கு வழங்கும் அரசாங்கம். இதனைத் தேரர்கள் போன்றே நாட்டை நேசிக்கும் மக்களும் மனதில் கொள்ள வேண்டும்.

அரசாங்கம் எத்தனை சிரமங்களை எதிர்கொண்டாலும் நாட்டின் சுதந்திரத்துக்காகத் தைரியமான முடிவுகளை எடுத்துள்ளோம்.

எனவே, நாட்டை நேசிக்கும் துறவிகள், மதத் தலைவர்கள் மற்றும் அனைத்து மக்களும் இந்த அரசாங்கத்தில் எங்களுடன் நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க பாரிய முடிவுகளை எடுத்த குழு நாங்கள்.

உங்கள் ஆதரவு மற்றும் புரிதலுடன் மட்டுமே நாங்கள் அவர்களை முன்னோக்கி நகர்த்த முடியும். மக்கள் எங்களை நம்பி எங்களுக்கு அதிகாரம் கொடுத்தார்கள். நாங்கள் உருவாக்கிய ஒவ்வோர் அரசாங்கமும் மக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்தது. உங்கள் நம்பிக்கையை நாங்கள் தொடர்ந்து பாதுகாப்போம் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.– என அவர் மேலும் தெரிவித்தார்.

## நாவலப்பிட்டிய பாடசாலையில் 16 பேருக்குக் கொரோனா!

நாவலப்பிட்டிய – வேஸ்ஹோல்ட் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 15 மாணவர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டிருந்தன.

இவ்வாறு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அறிக்கை கடந்த ஞாயிறு இரவு கிடைத்ததாகவும் இதிலேயே மாணவர்களுக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன், பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

## நீர்ப்பாசன திட்டங்களை ஏற்படுத்தி விளை நிலங்கள் அதிகரிக்கப்படும்!

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



நீர்ப்பாசன திட்டங்களை ஏற்படுத்தி விளை நிலங்களை அதிகரிக்கும் பல்வேறு செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த அவர் குளம் புனரமைப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்துவிட்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நாட்டின் தேசிய உற்பத்திக்கு ஊக்கமளிக்கின்ற சிந்தனையின் வெளிப்பாடாக இத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒருகாலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடு இது. இதற்கு முதல் அரிசியைப் பெருமளவில் இறக்குமதி செய்திருந்த நிலைமையையும் நாம் கண்டிருக்கிறோம்.

அந்தவகையில் விவசாயப்புரட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமே இது.

தற்போது மாகாண விவசாயத்திணைக்களத்திலே ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எமக்கு அனுமதி கிடைத்துள்ளது. அதனைச் செய்து வருகிறோம்.

இதன் மூலம் விவசாயத் திணைக்களத்தின் சேவைகளை மேலும் மேம்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதேவேளை விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காகப் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2 கோடி ரூபாவை விடுவித்துள்ளேன்.

அத்துடன் மேலும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 4 வீத வட்டியிலே பணத்தை விடுவிப்பதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதனுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் வடக்கிலே அதனை முன்னெடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நீர்ப்பாசனம் மட்டுமல்லாமல் விவசாயம், விவசாயப் பொருள்களைச் சந்தைப் படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக மாகாண நிர்வாகமும் மத்திய அரசுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மேலதிகமாக நீர்த்தேக்க திட்டங்களை அமைப்பதற்கும் அதனூடாக குடிதண்ணீர் வழங்குதல் மற்றும் விளைநிலங்களை அதிகரிப்பதற்குமான செயற்திட்டங்களையும் மத்திய அரசும் மாகாண சபையும் இணைந்து முன்னெடுக்கவிருக்கின்றன.

எனவே இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி அதன் பயனை அடைய வேண்டும் இதற்கு மாகாண நிர்வாகம் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# போராட்ட ஜீவிகள் என்றொரு புதிய வகைக் கூட்டம் நாட்டில் உருவாகியுள்ளது - பிரதமர் மோடி விமர்சனம்

போராட்ட ஜீவிகள் என்றொரு புதிய வகைக் கூட்டம் நாட்டில் உருவாகியிருக்கின்றது எனப் பிரதமர் மோடி விமர்சித்துள்ளார்.

மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரை மீது பதிலளித்துப் பேசிய அவர் –

போராட்ட ஜீவிகள் என்றொரு புதிய வகைக் கூட்டம் நாட்டில் உருவாகியிருக்கின்றது என்றும், எந்த வகை போராட்டம் எங்கு நடந்தாலும் அவர்கள் சென்றுவிடுவதாகவும் விமர்சித்தார்.

போராட்டங்கள் இல்லாமல் வாழ முடியாத அத்தகைய சக்திகளை அடையாளம் கண்டு நாட்டைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என மோடி கூறினார். திரிணமூல் எம்.பி. பேசும்போது ஆத்திரமூட்டல், பேச்சு சுதந்திரம் என்றெல்லாம் பேசியதாகவும், ஆனால் அவர் மேற்கு வங்கத்தை நினைத்துக் கொண்டு இங்கு பேசுவதாகவும் கிண்டல் தொனியில் விமர்சித்தார்.

அதேமயம், நாகரிகமாகவும், நல்ல சொற்களையும் தேர்ந்தெடுத்துப் பேசும் குலாம் நபி ஆசாத்தை பார்த்து அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று மோடி குறிப்பிட்டார்.






இயற்கையின் அருட்கொடை, இமயமலை என்று சொல்லலாம். இந்த இமயமலையில் ஏராளமான பனிப்பாறைகள் இருக்கின்றன. இந்த பனிப்பாறைகள்தான் கோடானக்கோடி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்குகின்றன.

ஆனால் உலக வெப்பமயமாதல் என்ற அநியாயம் ஓசையின்றி அரங்கேறி வருவதால் இந்த பனிப்பாறைகள் வேகமாக, அதுவும் இரு மடங்கு வேகமாக உருகத்தொடங்கி இருக்கின்றன.

அதுவும் இந்த 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இதனால் ஒரு கட்டத்தில் பல ஆசிய நாடுகளின் குடிநீர் தேவைக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற அபாய மணியை 2019 இல் வெளியான ஒரு ஆய்வு அறிக்கை அடித்துள்ளது.

இந்தியா, சீனா, நேபாளம், பூட்டான் என பல நாடுகளில் 40 ஆண்டு காலமாக எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்களின் அடிப்படையில் நடந்துள்ளது. இமயமலையில் மேற்கில் இருந்து கிழக்கு வரை 2 ஆயிரம் கி.மீ. தொலைவில், ஏறத்தாழ 650 பனிப்பாறைகளின் செயற்கைக்கோள் படங்களை ஆராய்ச் சியாளர்கள் ஆராய்ந்துள்ளனர்.

அமெரிக்க உளவு செயற்கைக்கோள்களின் படங்களைக் கொண்டு, 20 ஆம் நூற்றாண்டில் இமயமலை பனிப்பாறைகளின் நிலைமையை ஆராய்ந்துள்ளனர்.

இந்த செயற்கைக்கோள் படங்களை, ஆராய்ச்சியாளர்கள் 2000 ஆம் ஆண்டுக்கு பிந்தைய அதிநவீன செயற்கைக்கோள்களில் இருந்து, ஒளியியல் தரவுகளுடன் ஒப்பிட்டுள்ளனர். இந்த ஒப்பீட்டில் இமயமலை பனிப்பாறைகளின் உயரம் குறைந்திருப்பது நேரடியாக தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில் தெரியவந்துள்ள கசப்பான உண்மை, இமயமலை பாறைகளை பருவநிலை மாற்றம் அழித்து வருகிறது என்பதுதான்.

‘சயின்ஸ் அட்வான்சஸ்’ என்ற பத்திரிகையில் 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இந்த ஆய்வு அறிக்கை வெளியாகி இருக்கிறது. அதன் முக்கிய அம்சங்கள் இவைதான் –

இமயமலை பனிப்பாறைகள் 2000 ஆம் ஆண்டில் இருந்து சுமார் அரை அடி அளவுக்கு இழந்து வருகின்றன. இது 1975 முதல் 2000 ஆம் ஆண்டு வரையிலான உருகும் அளவை விட இரு மடங்கு ஆகும். இந்த கால இடைவெளியில் இமயமலை பனிப்பாறைகள் எவ்வளவு வேகமாக உருகுகின்றன என்பதற்கான தெளிவான படம் இது என்கிறார், அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவரும், ஆய்வின் முதன்மை ஆய்வாளருமான ஜோசுவா மாரர்.

கடந்த 40 ஆண்டுகளில் இந்த பனிப்பாறைகள், கால் பகுதியை இழந்து விட்டன. பனிப்பாறைகள் உருகுவது சீராக நடைபெற்று வருகிறது. இதற்கு முதன்மையான காரணம், வெப்பநிலை உயர்ந்து வருவதுதான். வெப்பநிலை இடத்துக்கு இடம் மாறுபடும். ஆனால் 2000 ஆம் ஆண்டில் இருந்து 2016 வரை, வெப்ப நிலையானது 1975 முதல் 2000 வரையில் இருந்ததை விட சராசரியாக ஒரு செல்சியஸ் அதிகமாக இருந்தது.

1975 – 2000 கால கட்டத்தில், இமயமலை பிராந்தியத்தில் உள்ள பனிப்பாறைகள் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக கால் மீற்றர் அளவுக்கு குறைந்துள்ளது. 2000 ஆம் ஆண்டில் இருந்து இது ஆண்டுக்கு அரை மீற்றர் அளவுக்கு குறைந்துள்ளது.

ஆசிய நாடுகள் நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு போன்ற புதைபடிவ எரிபொருட்களை, உயிரிகழிவுகளை அதிகளவில் எரிக்கின்றன. இதனால் ஏற்படுகிற வெப்பம், மேலே செல்கிறது. அவற்றின் பெரும்பகுதி இறுதியில் பனிப்பாறை பரப்புகளில் இறங்குகிறது. அங்கு அது சூரிய சக்தியை உறிஞ்சி உருகுவதை விரைவுபடுத்துகிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எனவே இப்படி ஆசிய நாடுகளில் புதைவடிவ எரிபொருள்களையும், உயிரிகழிவுகளையும் எரிக்க எரிக்க, அது இமயமலை பனிப்பாறைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இதன் காரணமாக கோடானக்கோடி மக்களுக்கு குடிநீர் கிடைப்பது கேள்விக்குறியாகிவிடும் என்ற அபாய மணியை ஒலிக்காமல் இருக்க முடியவில்லை.

# சசிகலாவின் காரில் இருந்து அ.தி.மு.க. கொடி அகற்றம்



பெங்களூருவில் இருந்து அ.தி.மு.க. கொடி பொருத்திய காரில் சசிகலா இன்று தமிழகம் புறப்பட்டார். சென்னை புறப்படும்போது பெங்களூவில் ஜெயலலிதா படத்துக்கு மலர் தூவி சசிகலா, டிடிவி தினகரன் ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

அ.தி.மு.க. கொடியை பயன்படுத்தக்கூடாது என்று காவல்துறை அறிவுறுத்திய நிலையில் காரில் மீண்டும் அதிகமுக கொடியுடன் தமிழகம் புறப்பட்டார் சசிகலா. சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை முடிந்து விடுதலை ஆன இளவரசியும் காரில் சென்னை திரும்புகிறார்.

சென்னை வரும் சசிகலாவுக்கு தமிழக எல்லையான அத்திப்பள்ளியில் இருந்து சென்னை இல்லம் வரை சாலையின் இருமருங்கிலும் அமமுகவினர் திரண்டு நின்று வரவேற்பு அளிக்க உள்ளனர்.

இந்நிலையில் பெங்களூருவில் இருந்து புறப்பட்ட சசிகலா, தமிழக எல்லைப்பகுதி அருகே வேறு காருக்கு மாறினார். வேறு காருக்கு மாறிய நிலையில் அவர் முன்பு வந்த காரில் இருந்த அ.தி.மு.க. கொடி அகற்றப்பட்டது.

தமிழக எல்லைப்பகுதிக்குள் வந்தடைந்த சசிகலாவிற்கு அ.தி.மு.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அ.தி.மு.க. கொடியுடன் தான் பயணிப்போம் என்று சசிகலாவின் வழக்கறிஞர் ராஜா செந்தூர்பாண்டியன் கூறினார். காவல் துறை நோட்டீஸ் அளித்தால் சட்டப்பூர்வமாக எதிர்கொள்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேட்டுப்பாளையத்தில் யானைகள் முகாம் கோவில் யானைகள் குதூகல கொண்டாட்டம்



இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மேட்டுப்பாளையம் வனப்பத்ர காளியம்மன் கோவில் பவானி ஆற்றுப்படுகையில் ஒவ்வொரு ஆண்டும் கோவில் மற்றும் திருமடங்களை சேர்ந்த கோவில் யானைகளுக்கு புத்துணர்வு முகாம் நடப்பது வழக்கம்.

இந்த ஆண்டுக்கான யானைகள் புத்துணர்வு முகாம் இன்று மாலை தொடங்குகிறது. தொடர்ந்து 48 நாட்கள் இந்த முகாம் நடக்கிறது. அமைச்சர்கள் முகாமை தொடங்கி வைக்கின்றனர்.

முகாமில் பங்கேற்க உள்ள யானைகள் அனைத்தும் நேற்று காலை முதலே தேக்கம்பட்டியில் உள்ள முகாம் நடைபெறும் இடத்திற்கு வந்து கொண்டிருந்தன.

நேற்று மாலை வரை தமிழகத்தில் உள்ள கோவில்கள் மற்றும் மடங்களை சேர்ந்த 26 யானைகள் முகாமுக்கு வந்துள்ளன. முகாமுக்கு வந்த யானைகள் அனைத்தும் லொறியில் இருந்து இறங்கியதும் நீண்ட தூர பயணம் காரணமாக தண்ணீர் உள்ள இடத்தைத் தேடி சென்று தங்களது தாகத்தை தீர்த்து கொண்டன. ஒரு சில கோவில் யானைகள் சந்தோ மிகுதியில் துதிக்கையால் மண்ணை அள்ளி தன் உடல் முழுவதும் மீது வீசி உற்சாகத்தை வெளிப்படுத்தியது.

அதன் பின்னர் யானைகள் வனப்பத்ர காளியம்மன் கோவில் முன்பு அழைத்து செல்லப்பட்டு அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில் யானைகள் அனனத்தும் கலந்து கொண்டு துதிக்கையால் அம்மனை வழிபட்டன.

தொடர்ந்து யானைகள் முகாம் நடைபெறும் இடத்துக்கு அழைத்து செல்லப்பட்டன.

அங்கு சென்றதும் நீண்ட நாட்களுக்கு பிறகு சந்தித்து கொண்டதால் ஒவ்வொரு யானைகளும் துதிக்கையால் கட்டித் தழுவி தங்களது அன்பை வெளிப்படுத்தின. முகாமில் பங்கேற்ற யானைகள் அனைத்தும் இன்று காலை நடைப்பயிற்சிக்கு அழைத்து செல்லப்பட்டன. பின்னர் சவரில் குளிக்க சென்ற யானைகள் தண்ணீரை பீய்ச்சி அடித்து குளித்து மகிழ்ந்தன.

முகாமில் பங்கேற்கும் யானைகளுக்கு காட்டு யானைகளால் எந்தவித பாதிப்பும் ஏற்பட்டு விட கூடாது என்பதற்காக முகாம் நடைபெறும் இடத்தை சுற்றிலும் 3 அடுக்கு மின்வேலி பாதுகாப்பு போடப்பட்டுள்ளன குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவிற்கு பின் திருப்பதியில் 50 ஆயிரம் பக்தர்கள் தரிசனம்



கொரோனா ஊரடங்கு தளர்வுக்கு பின்னர் முதலில் 3 ஆயிரம் பக்தர்களுடன் திருப்பதியில் தரிசனம் தொடங்கப்பட்டது. பின்னர் படிப்படியாக தரிசனம் செய்ய பக்தர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

திருப்பதியில் தற்போது தினசரி ரூ.300 கட்டணத்தில் 20 ஆயிரம் பக்தர்கள், இலவச தரிசனத்தில் 20 ஆயிரம் பக்தர்கள், வி.ஐ.பி. தரிசனம் மற்றும் ஸ்ரீவாணி அறக்கட்டளை மூலம் வி.ஐ.பி. பிரேக் டிக்கெட் பெற்ற பக்தர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் என தினமும் 10 ஆயிரம் பக்தர்கள் வரை தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

கொரோனா ஊரடங்கு தளர்வுக்கு பிறகு கடந்த நாட்களில் சுமார் 40 ஆயிரம் பக்தர்கள் வரை தான் தரிசனத்திற்கு சென்று வந்தனர். நேற்று முன்தினம் முதல் முறையாக 50 ஆயிரம் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 50,200 பக்தர்கள் தரிசனம் செய்தனர். 25,621 பேர் முடிகாணிக்கை செலுத்தினர். இந்திய ரூபாயில் 3.11 கோடி உண்டியல் வசூலாகியுள்ளது.

நேற்று 51,796 பக்தர்கள் தரிசனம் செய்தனர். 23,165 பேர் முடிகாணிக்கை செலுத்தினர். இந்திய ரூபாவில்2.80 கோடி உண்டியல் வசூலாகியுள்ளது. தினமும் அதிகாலை 3 மணி முதல் இரவு 11 மணி வரை பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராணுவ ஆட்சிக்கு எதிராக மியன்மாரில் போராட்டம்



மியன்மாரில் ராணுவ ஆட்சிக்கு எதிராக யாங்கூன் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் 3வது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மியன்மாரில் ராணுவ ஆட்சியை எதிர்த்தும், ஆங் சாங் சூகியை விடுதலை செய்யக்கோரியும் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது. தங்களுக்கு ராணுவ ஆட்சி வேண்டாம், ஜனநாயக ஆட்சி தான் வேண்டும் என்ற பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டு பொதுமக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இதனை கட்டுப்படுத்த களமிறங்கியுள்ள இராணுவம், தண்ணீரை பீய்ச்சி அடித்து போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கலைத்து வருகின்றனர். கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகப்பெரிய போராட்டம் மியான்மரில் வெடித்துள்ளது.

**நாள்தோறும் புதுப் புது போராட்டங்கள்**

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் இரு சக்கர வாகனப் பேரணியில் ஈடுபட்டனர்.

மியன்மாரில் இராணுவ ஆட்சி அமல்படுத்தப்பட்டதை கண்டித்து நாள்தோறும் மக்கள் புதுப் புது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் டேவி நகர சாலையில் திரண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பர்மிய மக்கள் இருசக்கர வாகனத்தில் ஊர்வலமாக சென்றும், ராணுவ ஆட்சிக்கு எதிராக கோங்கள் எழுப்பியும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

## சீனாவில் வசந்த காலப் பண்டிகையை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் முன்னோட்டப் பணிகள் தீவிரம்



சீனாவில் வசந்த காலப் பண்டிகையை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் ஒத்திகை நடைபெற்றது.

சீனாவில் வசந்த கால பண்டிகை மற்றும் புத்தாண்டு விழா வரும் 11 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. விழாவில் மாபெரும் கலை நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

இதையடுத்து கலை நிகழ்ச்சிகள் ஒத்திகை பார்க்கப்பட்டது. வண்ண வண்ண விளக்குகள் மற்றும் நடன கலைஞர்களின் ஒத்திகை பார்ப்போர் கண்களை கவர்ந்தன.

# சிவப்பு நிறத்தில் ஓடும் வெள்ளம் இந்தோனேஷிய மக்கள் அவதி



இந்தோனேஷியாவில் உள்ள ஜாவா பகுதியில் ஜெயில் கோட் என்ற இடம் உள்ளது.

இங்குள்ள கிராமங்களில் நேற்று இரத்த சிவப்பு நிறத்தில் வெள்ளம் சூழ்ந்தது. இதனால் அங்குள்ள மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். அந்த வெள்ளத்தை தொலைபேசியில் படம் பிடித்து சமூக வலைத் தளங்களில் பதிவிட்டனர்.

இதையடுத்து அதிகாரிகள் அங்கு சென்று ஆய்வு செய்தனர். அப்போது இந்தோனேஷியாவின் பெகலோஸ்கன் நகரின் தெற்கு பகுதியில் பாரம்பரிய முறையில் ஆடைகளுக்கு சாயமிடும் தொழிற்சாலைகள் உள்ளது.

அந்த சாயம் மழைநீரில் கலந்ததால்தான் வெள்ளம் சிவப்பு நிறமாக மாறியுள்ளது என்றும் தெரியவந்தது.

இதற்கு முன்பும் பெகலோஸ்கனில் உள்ள நதிகளும் இந்த சாயத் தொழிற்சாலைகளால் நிறம் மாறி இருக்கின்றன. இந்த முறையும் அதேபோன்ற வெள்ளம் இந்த கிராமங்களை சூழ்ந்து இருக்கிறது. அடுத்து மழை பெய்யும் போது நிறம் மாறிவிடும் என்று அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

இந்தோனேஷியாவில் அடிக்கடி மழை பெய்துவது இயல்பான ஒன்று. சமீபத்தில் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 43 பேர் உயிரிழந்தனர். அதுபோல் இப்போதும் நடந்திருக்கிறது. மழை வெள்ளத்தில் சாயம் கலந்ததால் இந்த பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது. சமீபத்தில் இந்தோனேஷியாவில் ஒரு விமான விபத்து ஏற்பட்டது. எரிமலை வெடிப்பும் ஏற்பட்டது. இப்போது மீண்டும் மழை பெய்து ரத்த சிவப்பு நிறத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

## இங்கிலாந்தில் கொட்டும் பனிப் பொழிவு வீதிக்கு வந்து விளையாடி மகிழும் மக்கள்

இங்கிலாந்தில் கொட்டும் பனியிலும் மக்கள் பனி சறுக்கு விளையாடி மகிழ்ந்து வருகின்றனர்.

இங்கிலாந்தில் வழக்கத்துக்கு மாறாக கடும் பனிப் பொழிவு கொட்டி வருவதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

கிழக்கு மற்றும் தென் கிழக்கு பகுதிகளில் அதிக பனிப் பொழிவு காணப்பட்டு வரும் நிலையில் வீடுகளை துறந்த மக்கள் சாலைகளில் முகாமிட்டு மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

கொட்டும் பனியிலும் பனிப் பந்து செய்து மற்றவர் மேல் எறிந்தும், பனிச் சறுக்கு விளையாடியும் மகிழ்ச்சி அடைகின்றனர்.



## குதிரைகளுக்கு அழகிப் போட்டி: வெற்றிப் பரிசாக ரூ.25 கோடி!



கட்டாரில், அரேபிய குதிரைகளுக்காக நடைபெற்ற அழகு போட்டியில் வெற்றி பெற்ற 3 குதிரைகளுக்கு 25 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன.

தலைநகர் தோஹாவில் நடைபெற்ற அழகு போட்டியில், வளைகுடா மற்றும் ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்த 252 குதிரைகள் கலந்து கொண்டன.

வயதின் அடிப்படையில் 3 பிரிவுகளாக நடைபெற்ற அழகு போட்டியில், முகத்தோற்றம், உடல்வாகு மற்றும் நடையின் அடிப்படையில் வெற்றி பெற்ற குதிரைகள் தேர்வு செய்யப்பட்டன.


# சொர்க்கம் திருமண சேவை

**மணமகன் விபரம்**

பிறந்த திகதி - 1983.10.13 மதம் - இந்து
ஜாதி - கோவியர் நட்சத்திரம் - பூராடம்
தகைமை - Civil Engineering
தொழில் - Civil Engineer in London
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1985.08.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ்/சூரி - 8இல்
நட்சத்திரம் - பூரட்டாதி 3 ஆம் பாதம்
தொழில் - கனடாவில் சொந்தத் தொழில்
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1993.08.06 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 8 இல்
நட்சத்திரம் - உத்திரட்டாதி
தகைமை - Engineering
தொழில் -Marine Engineer
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1988.10.13 மதம் - இந்து
ஜாதி - குருகுலம்
தகைமை - Machanical Engineering
நட்சத்திரம் - விசாகம் 1 ஆம் பாதம்
தொழில் - Engineer in Singapore
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

**மணமகள் விபரம்**

பிறந்த திகதி - 1986.08.27 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 08 இல்
நட்சத்திரம் - கார்த்திகை 2ம் பாதம்
தகைமை - M.B.B.S
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - அரச பல்கலைக்கழக பட்டம் பெற்ற மணமகன்.

பிறந்த திகதி - 1992.12.24 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - மூலம்
தகைமை - B.com, B.sc
தொழில் - Hospital Reception Canada
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த நற்குணமான மணமகன்

பிறந்த திகதி - 1991.01.08 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - சித்திரை 3ம் பாதம்
தொழில் - கனடாவில் வேலை
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய மணமகன்.

பிறந்த திகதி - 1992.12.10 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் செவ் -7 இல்
நட்சத்திரம் - மிருகசீரிடம்
தகைமை - Bachelor of Law
தொழில் - லண்டனில்
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்.

102/A பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். www.sorkham.com
தொடர்புக்கு - 001416661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



**கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மாமனிதருமான அமரர் அரியநாயகம் சந்திரநேரு உயிர் நீத்த தினம் இன்றாகும்.**

# மறைந்தும் மறையாத மாமனிதர்

# அரியநாயகம் சந்திரநேரு

## இன்று 16ஆவது சிரார்த்ததினம்



ஈழ வரலாற்றை பொறுத்தவரையில் விடுதலையின் பால் ஈர்க்கப்பட்டு கொள்ளையேற்று புறப்பட்டவர்களுக்கு பின்னால் நீண்ட நெடிய வரலாறுகள் உள்ளன. அவ்வாறான வரலாற்று நாயகர்களின் சாதனைகள், தியாகம், மண்மீதும் மக்கள் மீதும் கொண்ட பற்றுறுதி என்பன அவரின் இறப்பின் பின்புதான் போற்றப்படும். அவ்வாறான மனிதருள் போற்றப்படும் மாமனிதரே அரியநாயகம் சந்திரநேரு ஆவார்.

1944ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி திருக்கோயிலில் பிறந்த அரியநாயகம் சந்திரநேரு இலங்கை தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளராவார்.

தனது தந்தையான ஆர். டபிள்யூ வி. அறப்போர் அரியநாயகத்தை போன்றே தமிழரசு கட்சியின் தீவிர ஆதரவாளராகவும் தமிழினத்தின் உரிமைக்காக அயராது முன்னின்று பாடுபட்டவருமாவார். இறக்கும் வரையில் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளராக இருந்ததுடன் தேசியத்தின் பால் மிகுந்த பற்றுறுதியுடனும் இருந்து மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்த ஒருவராகநேரு கருதப்படுகிறார்.

ஆரம்பத்தில் கல்பிட்டி மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய இவர் பின்னாளில் அரச வேலையை துறந்து மாலைதீவு கப்பல் ஒன்றில் இரண்டாம் அதிகாரியாக இணைந்து பணியாற்றினார். நேர்மையும் அயராத உழைப்பின் பலனாக 6 ஆண்டுகளில் கப்பல் கப்டனாக பதவி உயர்வு பெற்றார். 80 களின் நடுப்பகுதியில் விடுமுறையில் இலங்கை வந்த இவர் மீது பயங்கரவாத தடைச்சட்டம் பிரயோகிக்கப்பட்டு ஒரு வருடம் பூசா சிறையில் அடைக்கப்பட்டார். ஒரு வருட சிறை வாழ்க்கை நேருவை ஒரு விடுதலை மனிதனாக மாற்றியமைத்தது தமிழ் தேசியத்தின் பால் ஈர்க்கச்செய்ததுடன் ஆயுதப்போராட்டத்திற்கும் ஆதரவளிக்க செய்தது. சிறையில் இருந்து விடுதலையான நேரு மீண்டும் கப்பல் பணியில் இணைந்து கொண்டார்.

1990வரை கப்பல் பணியில் கடமையாற்றியவர் 90களின் பிற்பகுதியில் ஓய்வு பெற்று தனது சொந்த ஊரான திருக்கோவிலுக்கு வந்து சேர்ந்தார். சில காலம் பல கடைகளை கொள்வனவு செய்து வர்த்தக வியாபாரத்தில் ஈடுபட்டதுடன் தொழிலதிபருமானார். கனிவான சிரிப்பும், இயலாது தன்னை நாடி வருவோருக்கு ஈர்ந்தளிக்கும் குணம் மண்மீதும் மக்கள் மீதும் கொண்ட அன்பு கொண்ட மனித நேயனை அம்பாறை மாவட்ட மக்கள் நாடாளுமன்றம் செல்ல வைத்து அழகு பார்க்க நினைத்தனர். இதன் பலனாக 2001ம் ஆண்டு நடைபெற்ற இலங்கையின் 12ஆவது நாடாளுமன்ற தேர்தலில் சந்திரநேருவை போட்டியிடச்செய்தனர். 26,282 விருப்பு வாக்குகளைபெற்று அமோக வெற்றியீட்டிய நேரு நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார். தான் பதவியிலிருக்கும் குறுகிய காலத்தில் தன்னாலான சேவைகளை மக்களுக்கு ஆற்றினார். நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரை இவர் மேற்கொண்ட பணிகள் அளப்பரியது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற 13ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்ட அவர் 25, 572 வாக்குகளை பெற்றதுடன் பல நூறு வாக்குளால் தோல்வியை தழுவியிருந்தார்.

தான் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் மண்ணையும் மக்களையும் தீவிரமாக நேசித்ததுடன் சிங்கள அரசினால் குடியேற்றம் என்கின்ற பெயரில் தமிழர்களின் எல்லை பிரதேசங்களை ஆக்கிரமிப்பு செய்த போதெல்லாம் மக்கள் எழுச்சியினூடாக அதைதடுத்துநிறுத்தி மகத்தான பங்காற்றினார்.

இருப்பினும் 2004ம் ஆண்டு நாடாளுமன்ற தோல்வியை தழுவியதன் பின்னராக 2005இல் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே அமைதி ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் 2005 பெப்ரவரி 7ஆம் திகதி அன்று விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை அரசியல் துறை பொறுப்பாளர் கௌசல்யனுடன் வாகனத்தில் சந்திரநேரு பயணித்த போது இவர்கள் சென்ற வாகனம் தாக்குதலுக்குள்ளானது.

படுகாயமடைந்த நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்ட சந்திரநேரு பெப்ரவரி 8 காலை உயிரிழந்தார். நேருவின் இறப்பு அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கும் அவரை நேசிப்பவர்களுக்கும் பேரிழப்பாக அமைந்திருந்தாலும் அவர் விட்டுச் சென்ற அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்கின்ற இடைவெளி 16 ஆண்டுகள் வரை இன்னும் வெற்றிடமாகவே உள்ளது. இறக்கும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவிர பற்றாளராக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து உயிர்நீத்த அரசியல்வாதிகளான மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு, நடராஜ் ரவிராஜ், ஜோசப்பரராஜசிங்கம் போன்றோரின் படுகொலைக்கு இன்னும் நிலையானதொரு நீதியை பெற்றுக்கொடுக்க முடியாதவர்களாகவே உள்ளனர்.

ஆனால் படுகொலை செய்த கொலையாளர்கள் இன்னும் உத்தமர்களாகவே மக்கள் முன் நடமாடுகின்றனர். ஐக்கியநாடுகள்சபையின் 42 வது கூட்டத்தொடர் ஆரம்பமாகின்ற நிலையில் படுகொலைசெய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகளின் நீதிக்கான குரலும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும்.

**செல்வி வினாயகமூர்த்தி**

**நேற்று முடிவடைந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியின் சில பதிவுகள்.....**















# வடக்கில் மூன்று தீவுகளைப் புதுப்பிக்க இரட்டை சக்தி சீனாவுடன் இலங்கை முன்னெடுப்பு; இந்தியா அதிருப்தி!

கொழும்பு, ஜன. 08

வடக்கில் மூன்று தீவுகளை உள்ளடக்கிய புதுப்பிக்கத்தக்க இரட்டை ரக சக்தி திட்டத்தை சீனாவுடன் இணைந்து இலங்கை முன்னெடுக்கவுள்ளமை இந்தியாவின் தேசிய பாதுகாப்புடன் நேரடியாகத் தொடர்புபடுவதாக டெல்லி கொழும்பிற்கு அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு திட்டமொன்று முன்னெடுக்க ஒத்துழைப்பைக் கோரியிருந்தால் நிச்சயமாக இந்தியா முழு அளவில் இலங்கைக்கு அதனை வழங்கியிருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கொழும்பின் தற்போதைய நகர்வுகள் தொடர்பாக டெல்லி கூர்மையாக அவதானித்து வருகின்ற நிலையில் வடக்கில் நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளை உள்ளடக்கிய புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டத்தை சீனாவுடன் இணைந்து இலங்கை முன்னெடுக்கவுள்ளது.

இதற்கான அமைச்சரவை அனுமதி ஜனவரி 17 ஆம் திகதி அமைச்சரவை கூட்டத்தின் போது சமர்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை அனுமதிக்கமைவாக சினோசோர் ஈடெக் வின் என்ற நிறுவனத்துக்கு வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தீவுகளில் புதுப்பிக்கத்தக்க இரட்டை ரக சக்தி திட்டத்தையே முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே டெல்லி கவனம் செலுத்தியிருந்த நிலையில் மேற்படி 3 தீவுகளில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டம், இந்திய பாதுகாப்பு விடயத்தில் தாக்கம் செலுத்துவதாக கொழும்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து வெறும் 30 கடல் மைல் தொலைவிலேயே (48 கிலோமீற்றர்) நெடுந்தீவு அமைந்துள்ளமையை சுட்டிக்காட்டியிருக்கும் டெல்லி , எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் அந்நிய நாடுகளின் திட்டங்கள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் தாக்கம் செலுத்தி விடக் கூடாது என்பதில் மிக அக்கறையுடன் செயற்படுமாறு வலியுறுத்தியுள்ளது.

இதுவரைக்காலமும் இரு தரப்பாலுமே இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்த நிலையில் நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளை உள்ளடக்கிய புதுப்பிக்கத்தக்க இரட்டை ரக சக்தி திட்டத்தை சீனாவுடன் இணைந்து முன்னெடுக்கின்றமை நேரடியாகவே இந்தியாவின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் தாக்கம் செலுத்தும் என்பதை கொழும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திட்டத்தை இலங்கை மீளப் பெற்றுக்கொள்வதாக இல்லை. அதே போன்று தான் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்திலும் ஒரு தலைப்பட்சமாக செயற்பட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்துள்ளது.

இவ்வாறு பல விடயங்களில் ஏற்படக் கூடிய கசப்பான உணர்வுகள் இரு தரப்பிற்கிடையிலும் காணப்படக் கூடிய நல்லுறவில் விரிசல் நிலையை ஏற்படுத்தலாம் என இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்: 30 பேருக்கு எதிராக குற்றச்சாட்டு!

## முக்கிய தரப்பினர் பலர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் – சரத்வீரசேகர



ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய 30 பேருக்கு எதிராக கொலை மற்றும் அடிப்படைவாத செயற்பாடு திட்டமிடல் தொடர்பான குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

முக்கியமான தரப்பினர்கள் வெகுவிரைவில் சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்தப்படுவார்கள். அடிப்படைவாத செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்குவதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

கடந்த காலத்தில் பலவீனப்படுத்தப்பட்ட தேசிய பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத்வீர சேகர தெரிவித்தார்.

மாஹரகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்ததன் பின்னர் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டுக்கு பிறகு தேசிய பாதுகாப்பு தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டது. தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் அரசியல் கோணத்தில் பார்க்கப்பட்டன.

தேசிய புலனாய்வு பிரிவினர் திட்டமிட்ட வகையில் பலவீனப்படுத்தப்பட்டனர். தேசிய பாதுகாப்பை அடிப்படைவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை வெற்றிகரமாக செயற்படுத்திக் கொண்டார்கள்.

குறுகிய நேரத்திற்குள் 8 இடங்களில் தொடர் குண்டுத்தாக்குதலை மேற்கொள்வதென்பது சாதாரண விடயமல்ல. யுத்த காலத்தில் கூட இவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை.

நாட்டின் தேசிய பாதுகாப்பு எந்தளவிற்கு பலவீனப்படுத்தப்பட்டது என்பதற்கு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

சம்பவம் இடம்பெற்ற பின்னர் அந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்வது புலனாய்வு பிரிவினரது செயற்பாடல்ல எந்நிலையிலும் முன்னெச்சரிக்கையாக இருத்தல் அவசியமாகும். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நிறைவுறும் தறுவாயிலில் உள்ளன.

ஏப்ரல் 21 நாளில் இடம் பெற்ற 8 தொடர் குண்டுத்தாக்குதல் தொடர்பான ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

30 பேருக்கு எதிராக கொலை, அடிப்படைவாத செயற்பாட்டுக்கான திட்டமிடல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே, வெகுவிரைவில் முக்கிய தரப்பினர் பலர் சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்.

நாட்டில் தீவிரவாதம் இனியொரு போதும் தலைதூக்காது. தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயக நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது இயல்பான விடயம்.

எவருக்கு ஆட்சியதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள். அரசாங்கங்கள் மாற்றமடையலாம். ஆனால், நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான கொள்கை அரசியல் தேவைக்கேற்ப மாற்றமடைய கூடாது. அரசியல் கொள்கையை காட்டிலும் தேசிய பாதுகாப்பு தொடர்பான கொள்கை உறுதியாக இருத்தல் வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் சட்டத்தின் ஊடாக தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என்றார்.

# வடக்கில் மேலும் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில், 11 பேர் மன்னார் முசலியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 403 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதிலேயே 14 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அவர்களில் நால்வர் முசலி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் அவர்கள் முசலியில் அண்மையில் கொரோனாவால் உயிரிழந்தவருடன் தொடர்புடையவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அண்மையில் முசலி வாடியில் தொழிலாளி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில், அவருடன் தொடர்புடைய ஏழு பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனைவிட, கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வவுனியா செட்டிகுளம் வைத்தியாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மருத்துவர் கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

கல்யாணமாலை




| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1979.11.15 | பிறந்த திகதி - 1987.11.15 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - உத்தரம் 4 | நட்சத்திரம் - பூரம் |
| செவ் - 07இல் | செவ் - ------ |
| பாவம் - 92 | பாவம் - 23 1/2 |
| கல்வி - பட்டதாரி | கல்வி - A/L |
| தொழில் - U.K PR | தொழில் - கனடா PR |
| எதிர்பார்ப்பு - U.K வரவிரும்பும் பெண் | எதிர்பார்ப்பு - கனடா வரவிரும்பும் ஆண் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528

# இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமாகும்!

## நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.08

நாட்டின் அபிவிருத்திக்கு இன நல்லிணக்கம் அத்தியாவசியமானதொன்று. அதனை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகம் சிறந்த முறையில் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பெயரிடப்பட்டிருந்த தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகத்தின் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது காலத்தின தேவையாகும். பல இனத்தவர்கள் மற்றும் மதத்தவர்கள் மத்தியில் தேசிய ஐக்கியம், நல்லிணக்கம் நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமானவை.

தேசிய ஒற்றுமை மற்றும் இன நல்லிணக்கத்தை நோக்கிச்செல்கின்றமை இலகுவான விடயமல்ல.

அதனால் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகத்தின் புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையால் அதற்காக அவர்களால் முடிந்த பூரண ஆதரவை வழங்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. - என்றார்.

12 பேர் கொண்ட இந்தப் பணியகத்தின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி குஷாந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் நாயகமாக சுனில் கன்னங்கர நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சிறுபான்மை சமூகத்தில் இருந்து கலாநிதி ரிஸ்வி ஹசன், சட்டத்தரணி சுகந்தி விஜயசூரிய கதிர்காமர், மனோசேகரம், அப்ஸால் மரிக்கார் மற்றும் செந்தில் தொண்டமான் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.02.2021இல் வெளியிடப்பெற்றது.